Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 20 10-07-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 142

## சனசமூக நிலையங்களுக்கு உதவித்தொகை நிறுத்தம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட அரசினர் நன்கொடை பெறும 967 சனசமூக நிலையங்களுக்கும் கடந்த நா ற்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து உ ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த வருடாந்த உதவித்தொகை பணம் 1992ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு சனசமூக நிலயத்திற்கும் 600 ரூபா உதவிப் பணமாக வழங்கப்பட்டுவந்தது. வடக்கு - கிழக்கு மாகாணசபை இதற்கான நிதியை யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கத் தவறியதே இதற்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (24)

# 'யாழ்தேவி'யில் குண்டுவெடிப்பு

# இருவர் பலி; 12 பேர் படுகாயம்

## அநுராதபுர ரயில் நிலையத்தில் சம்பவம்

(கொழும்பு)

**கொழும்பிலிருந்து நேற்று முன் தினமிரவு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவி ரயில்வண்டியில் நேற்று அதிகாலை குண்டொன்று வெடித்ததில் இருவர் பலியாகினர். 12பேர் காயமடைந்தனர். அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தபோதே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது.**

இந்த ரயில் அநுராதபுரம் ரயில் நிலையத்தில நிறுத்தப்பட்டிருந்த சமயம் நேற்றுக் காலை 4. 45 மணியளவில் இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இச் சம்பவத்தில் காயமடைந்த 12 பேர் அநுராதபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

பொதுத் தேர்தலை முன்னிட்டு கொழும்பிலிருந்து வடபகுதிக்கு பயணிகள் செல்வதை தடுக்கும் முகமாக வவுனியா ரயில் சேவையை மதவாச்சிவரை நடத்த பாதுகாப்பு வட்டாரங்கள் திட்டமிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ராணுவ சுற்றிவளைப்பில் 3 பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பாவற்கொடிச்சேனைப் பகுதியை கடந்த 5ஆம் திகதி அதிகாலை 4. 30 மணியளவில் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசததுரோகிகளும் ஒரு பெண்ணையும் இரண்டு ஆண்களையும் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர் கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டபின்னர் இரு ஆண்களையும் விடுவிதத படையினர் பெண்ணைத் தடுத்து வைத்துள்ளதுடன் அப் பெண்ணின் வீட்டையும் எரித்துள்ளனர்.

ஒரு பிள்ளையின் தாயாரான பாவற்கொடிச் சேனை அருமைத்துரை சிவாஜினி (வயது 18) என்பவரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவர்.

## மட்டு. மாவட்டத்தில் இரு மீனவர்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டம் தாந்தாமலை டுளுக நாவிக் குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

கடந்த 2-ம் திகதி மாலை 5 மணியளவில் இக் கைது இடம்பெற்றது. இவ் இருவரும் கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர்களது உறவினர்கள் அங்கு சென்று விசாரித்த போது, அவர்களை விமானப் படையினர் மட்டக்களப்புக்கு கொண்டு சென்று விட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

திக்கோடை 40-ம் கிராமம் இரண்டு பிள்ளைகளின் தந்தையாகிய முத்துலிங்கம் விஸவலிங்கம் (வயது 30) 40-ம் கிராமம் சின்னத்துரை வன்னியசிங்கம் (வயது 22) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## குண்டுவெடிப்பில் காயமுற்ற இளைஞர் விசாரணையில்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் காயமுற்று சிகிச்சை பெற்று வருபவர் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த ரவிராஜ் என்று இனங்காணப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் கம்பனி ஒன்றில் சிற்றூழியராக கடமையாற்றும் இவரிடம் கொள்ளுப்பிட்டி பொலிசார் இப்போது விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தெற்கு ரயில்நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை உட்... ரயில்வே பாதுகாப்புச் சேவையைத்தவிர படையின...

## வாகன விபத்தில் சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ பௌசர் ஒன்று...

## அமரர் துரைராசாவுக்கு மகரயாழ் விருது

அகில இலங்கை கம்பன் கழகம் வழங்கும் மகரயாழ் விருது யாழ் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் துரைராசாவுக்கு வழங்கப்பட்டுள்ளது இது குறித்து கம்பன் கழகம் விடுத்த அறிக்கையில்:

எமது கழகம், மக்கள் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, அறிஞர் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின்படி, இவ்வாண்டுக்கான மகரயாழ் விருதினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களு...

(5ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் குறித்து ஆலோசிக்க டி. பி. தலைமையில் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி பொதுத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளது,

கட்சித் தலைமைக் காரியாலயமான சிறிகோத்தாவில் காலை 8-30 மணிக்கு இவ் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாகவும் இதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமை தாங்க இருப்பதாகவும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளரும் அழைக்கப்பட்டு இருப்பதாகவும் இவர்களுக்கு ஜனாதிபதியே ஆலோசனை வழங்க இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றது.

## ரிச்சாட் டி சொய்சாவை ராணுவம் வைத்திருந்தது

### காமினி பொன்சேகா

(கொழும்பு)

ரிச்சாட் டி சொய்சாவையார் கொன்றார்கள் என கூற முடியாது ஆனால் அவர் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பது உண்மைஎனமுன்னாள்பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ரிச்சாட் டி சொய்சாவின் தாயார் பல இராணுவ முகாம்களுக்கும் சென்று அவரைத் தேடிய பின்னர் தன்னிடமும் தொடர்பு கொண்டதாகவும் தான் அப்போதைய இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் ரிச்சாட் டி சொய்சா இராணுவ காவலில் இருப்பதை ஒத்துக் கொண்ட...

(5ஆம் பக்கம் பார்க்க)

ற்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர்களது உறவி

யோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

(கொழும்பு)

கொழும்பு கோட்டை உட்பட பிரதான ரயில் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்வே பாதுகாப்புச் சேவையைத்தவிர படையினரின் உதவியும் இதற்கு பெறப்படவுள்ளது. கொழும்புப் பகுதியில் பாதுகாப்பிற்கு பொறுப்பான கடற்படையின்

(5 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ பௌசர் ஒன்று தடம்புரண்டதில் அதன் சாரதி பலியாகியுள்ளார்.

இராணுவ முகாமிற்கு தண்ணீர் எடுத்துச் செல்கையில்

(5ஆம் பக்கம் பார்க்க)

ரிச்சாட் டி சொய்சாவின் தாயார் பல இராணுவ முகா

இருப்பதை ஒத்துக் கொண்ட

(5ஆம் பக்கம் பார்க்க)

# கும்புறுப்பிட்டி பகுதியில் புலிகள் ராணுவம் மோதல்

## ஒரு சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையே இடம்பெற்ற மோதலில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலலப்பட்டுள்ளார் என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டி பகுதியில் கடந்த புதனன்று இடம்பெற்ற மோதல் சமபவத்திலேயே இச் சிப்பாய் உயிரிழந்துள்ளார் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிததன.

# திருமலை மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் முகாமை சுற்றி வளைக்கும் நோக்குடன் சென்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடி மோதலொன்று இடம்பெற்றது.

கடந்த 6-ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற இம் மோதலின்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

இம் மோதலில் இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த கப்டன் கரன் (ஐயாத்துரை திருச்செல்வன், திருகோணமலை), 2ஆம்லெப்டினன்ட் வாணன் (தம்பிராசா எல்விஸ் பிரஸ்வின்,

(5ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் கரன்



2-ம்லெப்.வாணன்

# கொழும்பில் பிரவேசிக்கும் புலிகளை கைது செய்ய விசேட பொலிஸ் அணி

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தினுள் பிரவேசிக்கும் விடுதலைப் புலிகளைக் கைது செய்வதற்கென சிறிலங்காப் பொலிசார் விசேட அணியொன்றை உருவாக்கியுள்ளது. றபிட் பிளைபிங் அக்ஷன் குறூப் என்று அழைக்கப்படும் இக் குழு கொழும்பு மாவட்டத்தினுள் பிரவேசிக்கும் தமிழர்களை விசாரணை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ஏற்கனவே விடுதலைப் புலிகளின் ஆறு தாக்குதல் பிரிவுகள் செயற்பட்டு வருவதாக புலனாய்வுத் துறையினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டத்தில் 3 சுயேட்சை குழு போட்டி

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாகவும் ஒரு சுயேட்சைக்குழுவே இதுவரை தனது நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்திருப்பதாகவும் தெரியவருகின்றது. இதனைத் தவிர பல அரசியல் கட்சிகளும் இம் மாவட்டத்தில் போட்டியிடலாம் எனவும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டம் உட்பட பதினைந்து மாவட்டங்களில் தனது கட்சி நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலை

( 5ஆம் பக்கம் பார்க்க)

# ஹேமா பிரேமதாசா பிரச்சாரத்தை ஆரம்பித்தார்

(கொழும்பு)

கொழும்பு மத்திய தொகுதியில் தனது தேர்தல் பிரசார வேலைகளை தாம் நேற்று முதல் ஆரம்பித்துவிட்டதாக ஹேமாபிரேமதாசா தெரிவித்தார்.

ஐக்கியப் தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக தன்னை நியமிக்க கட்சி முன்வந்தபோதும், தான் தேர்தலில் போட்டியிடவே விரும்பியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

# கூட்டணி தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகளாக மூவர்

(கொழும்பு)

யாழ். மாவட்ட தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர், சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் சிறந்த முறையில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்றும் இத் தேர்தல் தொடர்பாக தடை உத்தரவு ஒன்றை விதிக்குமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இம் மனு தொடர்பாக ஓ. டபிள்யூ. ஒ சில்வா, கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ஆகியோர் ஆஜர் ஆகின்றனர்.

# சிங்களவருக்கு வாக்களித்த தமிழருக்கு கிடைத்தது அடி

## குமார் பொன்னம்பலம் கூறுகிறார்

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் மக்கள் சிங்கள கட்சிகளுக்கு வாக்களித்தும் தமிழ் மக்களுக்கு அடிதான் கிடைத்து வந்துள்ளது எனவேதான் நான் இம்முறை ஒரு சுயேட்சைக்குழுவை கொழும்பில் நிறுத்தியுள்ளேன் என குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சி. சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அளித்த பேட்டியிலேயே இக் கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில். வடக்கு கிழக்கில் தேர்தலை நடத்தவிடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டோம் என்கின்றார்கள். ஆனால் அதிலும் ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்கு தெரிகிறது என்றார்.

# அமைச்சர் செல்லச்சாமி சு.கவில் இணைவு

## கொழும்பு மாவட்டத்தில் போட்டி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்முன்னாள் பொதுச் செயலாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எஸ் செல்லச்சாமி பொதுஜன ஐக்கிய முன்னணியில்சேர்ந்துள்ளார்

நேற்று நண்பகல் சுதந்திரக் கட்சிதலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வீட்டில் தனது கட்சி அங்கத்துவ பத்திரத்தைபெற்றுக் கொண்டுள்ளார் என தெரியவருகின்றது.

இதேவேளை நாளை கொழும்பு மாவட்டத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெயர்ப்பட்டியலில் இவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன :

# தேர்தலில் ஆதரவளிக்க ரணில், கூரே நிபந்தனை

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட ஐ. தே. க வேட்பாளர் பட்டியலில் சங்கதாசாவின் பெயர் நீக்கப்பட்டதாகவும் பெயரை பட்டியலில் சேர்க்குமாறு ஜனாதிபதியிடம் வற்புறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், அமைச்சர் சிறிசேன கூரேயும இவ்வாறு ஜனாதிபதியை சந்தித்து வற்புறுத்தியதாகவும் இவரின் பெயர் பட்டியலில் இடம் பெறாவிட்டால், தான் கட்சியை விட்டு விலகுவது தவிர்க்க முடியாது என அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை சங்கதாசா கொழும்பில் போட்டியிடுவதை தான் விரும்பவில்லை என ஹேமா பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும் சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ். 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

### விற்பனைக்குண்டு

ஒரு மாதத்திற்கு உட்பட்ட கோழிக் குஞ்சுகள் - மணித் தாராக்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு. கந்தசாமி அன்சன்ஸ் 16 ஆடியபாத வீதி நல்லூர் யழ்ப்பாணம் (8756)

### விற்பனைக்குண்டு

மூளாய் மேற்கில் அமைந்துள்ள 7 பரப்பு, 4பரப்பு விஸ்தீரணமுள்ள 2 வளவுகள் சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. இ. பரம்சோதி. மூளாய், சுழிபுரம் (8757)

### இலவச சீருடை

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளை சேர்ந்த கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன அங்குள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மேற்படி சீருடைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்களும் கவனித்து வருவதாகவும், இவற்றை அநேகமான பாடசாலைகளில் நேற்று முன்தினம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்விக் கோட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

### விளையாட்டு போட்டி

(வடமராட்சி)

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் அப்பகுதியில் மண் மீட்பிற்காய் உயிர் நீத்த கிராம மாவீரர்களின் நினைவாக திங்கட்கிழமை கழக மைதானத்தில் காலை 6.00 மணிக்கு விளையாட்டுப் போட்டியை நடாத்தவுள்ளது. (யோ)

### வேட்பாளர் பட்டியல் மாற்றம்

## நினைவு கூருகின்றோம்...

### 10-07-1994....

1987-ம் ஆண்டு இதேதினத்தில் வல்வெட்டித்துறை - பொலிகண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வேந்தன்-கிருபா** (தில்லையம்பலம் கிருபைராசா- மீனாட்சியம்மன்கோயிலடி-வல்வெட்டித்துறை)

மட்டு - பழுகாமாம் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3தமிழர்கள்.

திருமலை-கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த-7தமிழர்கள்.

கரவெட்டி - துன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு மட்டு-கிரான் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுனில்-சுரேஸ்** (பொன்னுத்துரை புஸ்பன் - மாமங்கம் - மட்டு)

1989-ம் ஆண்டு பருத்தித்துறை-வியாபாரிமூலைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 06 வயதுச் சிறுவன் உட்பட 06 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு தமிழீழக்கடற்பரப்பில் (வல்வெட்டித்துறை) சிறிலங்காக் கடற்படைக் கப்பல்மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய கடற்கரும்புலிகளான,

கடற்கரும்புலி,

**கப்டன் கொலின்ஸ்** (பர்ணாந்து சில்வெஸ்டர் - நறுவிலிக்குளம் - மன்னார்)

கடற்கரும்புலி,

**மேஜர் காந்தரூபன்** (யோகராசா கோணேஸ்வரன் - ரேவடிகுச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

கடற்கரும்புலி,

**கப்டன் வினோத்** (வேலுப்பிள்ளை திலகராசா - திலகராசாவீதி, காட்டுவளவு வல்வெட்டித்துறை)

தவறுதலாகமிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய,

**தேவன்** (ஸ்ரீபன்ரெலர்-ஆலிம்நகர், மூதூர்-திருமலை)

முல்லைத்தீவு-கொக்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**மருது** (இராஜேந்திரம் சாந்தகுமார் - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

யாழ்-மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**சீனிவாசன்** (செல்வராசா உமையாளன் ஐயனார் கோயிலடி, சுண்ணாகம் - யாழ்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 02 தமிழர்கள். சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், எரித்தும் கொல்லப்பட்ட சிறுமி பெண் ஆகிய 02 தமிழர்கள். கல்முனைப் பகுதியில் சிறிலங்கா படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 31 தமிழர்கள்.

முல்லைத்தீவு - வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம்பெண்

1991-ம் ஆண்டு அம்பாறை - றவேக்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**ரூபன்-(---)**

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ரஜனி** (நாராயணன் மகாலிங்கம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய கடல் வெளி நடவடிக்கையில் சுற்றுலாவிடுதி முகாம் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.புண்ணியமூர்த்தி** (சின்னத்தம்பி சிவகுமார் - பொத்துவில் - 03 - அம்பாறை)

**காந்தன்** (கணபதிப்பிள்ளை பத்மநாதன் - ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு)

**தீபன்** (சாமித்தம்பி தங்கேஸ்வரன் - கள்ளித்தீவு, திருக்கோயில் - அம்பாறை

**விக்கி** (தங்கராஜா விக்னேஸ்வரன் - மல்வத்தை- அம்பாறை)

**குமார்** (இலட்சுமணன் குமார் - கித்துர், கரடியனாறு - மட்டு)

**லெப். வாகினி** (தேவராணி கந்தசாமி - சுங்கன் கேணி, வாழைச்சேனை - மட்டு)

**சுதாரா** (மகேஸ்வரி பொன்னுச்சாமி - பிரதானவீதி, கிரான் மட்டு)

**கப்டன் உதயகுமார்** (ஆறுமுகம் தனபாலசிங்கம்- 3-ம் கட்டை, சோலையடி - திருமலை)

**2-ம்லெப். அமராவதி** (நகுலேஸ்வரி பாலசிங்கம்- 2-ம் வட்டாரம், இரணைக்கேணி - திருமலை)

**றிசானா**(ஈஸ்வரி தங்கராசா - வி. வி. ஒழுங்கை ஆலங்கேணி கிண்ணியா - திருமலை)

**2-ம்லெப். கலிஸ்ரா** (செந்தமிழ்ச்செல்வி சதாசிவம் - பழம்பாசி, நெடுங்கேணி - மணலாறு]

**செந்தில்** (பாலசுந்தரம் செல்வக்குமார் - நாவலர் பண்ணை, மருதோடை - மணலாறு)

**விதுபாலா** (ஜெயராணி தளையசிங்கம்- தண்டுவான் மாமடுச்சந்தி - மணலாறு)

**கப்டன் பரன்** (சிங்காரம் அன்பழகன் - வன்னி விழாங்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)

**லோ** (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் - ஒட்டிசுட்டான்- முல்லைத்தீவு)

**கப்டன் மதிவண்ணன்** (சாமுவேல் புஷ்பராஜ் -கிறீஸ்தவகுளம், செட்டிக்குளம் - வவுனியா)

**லெப்.காந்தன்-கண்ணன்** (சிவசுப்பிரமணியம் சிவகணேஷ் - நெளுக்குளம் - வவுனியா)

**லெப்.கௌசலன்** (சத்திவேல் நாகேஸ்வரன் - செட்டிப்புலவு - வவுனியா)

**ஜமுனா** (சீதாலட்சுமி தியாகராசா - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

**லெப்.பிந்துரன்** (அன்ரனி ஜெராட் (லோகு) 7-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**2-ம்லெப்.சுதன்** (செபமாலை ஜேசுதாஸ் - பாலையடி, புதுக்குளம், வட்டக்கண்டல் - மன்னார்)

**ரூபிகா** (ஹெலன் டயானி அலோசியஸ் - செபஸ்தியார் கோயிலடி - மன்னார்)

**லோகா** (கோமதி சக்கிவேல்-இருதயநகர்-கிளிநொச்சி)

**லெப். சித்திக்** (தவானந்தவேல் விக்கினேஸ்வரன் - தெணியம்பை - வல்வெட்டித்துறை)

**லெப்.சியால்-சியாஸ்** (சிங்ஸ்லி யோசப் இராசரத்தினம் - வேம்படிவீதி, யாழ்ப்பாணம்)

**லெப்.நிலாம்ஸ்** (கனகரத்தினம் லதீஸ்வரன் - சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ்)

**2-ம்லெப்.வசிட்டன்** (அண்ணாமலை சசிக்குமார் நவாலி - மானிப்பாய்)

**2-ம்லெப்.தபேசா** (மஞ்சுளா அப்பையா - கொண்டலடி ஒழுங்கை, நல்லூர் - யாழ்)

**பகீர்தா** (சிவநந்தினி சின்னத்தம்பி - அண்ணமார் கோயிலடி, ஏழாலை-யாழ்)

**திலகன்** (திருச்செல்வம் கிங்ஸ்லி ஆம்ஸ்ரோங்ஜேந்திரன்-புதுக்குடியிருப்பு, பாசையூர்-யாழ்)

**நியூட்டன்** ( மாரசாமி சிவகுமார்-நாவற்குழி, கைதடி-யாழ்)

**மாயவன்** (சங்கரப்பிள்ளை கனகசிங்கம்-பாலாவி தெற்கு, கொடிகாமம்-யாழ்)

யாழ். வடமராட்சி புலோலியில் அமைந்துள்ள

## உபய கதிர்காம ஆலய வரலாறும் வளர்ச்சியும் (தான்தோன்றி சக்கரசண்முகர்)

தமிழ்நாட்டிலே திருநெல்வேலிப் பகுதியில் பாட்டப்பத்துக் கிராமத்தில் லோகாம்பாள் எனும் முருகனடியாள் வாழ்ந்து வந்தார். 1909ஆம் ஆண்டு ஒருநாள் அவருடைய கனவிலே முருகன் தோன்றி பின்வருமாறு கூறினான்; ''பச்சிமப் புலவர்க்கான நகரத்திலே ஒரு விளா மரத்தின் பக்கத்திலே ஒரு கூர்மையான பாறையிலே ஒரு சக்கரமொன்று அமைந்துள்ளது. நீ அந்நகரிற்கு சென்று அச்சக்கரத்தைத் தரிசித்து, அச்சக்கரத்தின் வடிவத்தை ஒரு தகட்டில் வரைந்து, அதை உன் கிருகத்திற்கு கொண்டு வந்து பூஜித்து வாவென்றும் கூறி திருவாய் மலர்ந்தருளினார். கனவிலே கூறப்பட்ட 'பச்சிமப் புலவர்க்கான நகரம்' எவ்விடம் இருக்கிறதென்று பலபேரிடம் விசாரித்து அறியமுற்பட்டார். ஆனால் அதன் அமைவிடத்தை ஒருவராலும் கூறமுடியவில்லை. ஆண்டுகளிரண்டு உருண்டோடின.

பின்பு 1911ஆம் ஆண்டு லோகாம்பாளின் கனவிலே முருகன் தேவியர் இருவருடன் மீண்டும் தோன்றி, 'பச்சிமப் புலவர்க்கான நகரம் 'போகவேண்டுமென்று இருக்கிறாயே! நாங்கள் பச்சிமப் புலவர்க்கான நகரத்தினுள் வசிக்கிறோம். இப்போது சில காரியார்த்தமாக இங்கு வந்தோம். நாங்கள் இப்போது அவ்விடம் போகின்றோம். நீயும் எங்களுடன் புறப்படு; வேண்டிய சௌகரியங்கள் செய்கின்றோம்.' என்றார் உடனே அவ்வம்மையார் முருகப்

## பட்டியல் மாற்றம்

(கொழும்பு)

ஐ.தே.வேட்பாளர் பட்டியல் சகல மாவட்டங்களிலும் நேற்று தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போதும் இறுதி நேரத்தில் சில மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை இருந்தமையினால் இதனை திட்டமிட்டவாறு செய்ய முடியாமல் போனதாக ஐ.தே.க. தலைமைகாரியாலயவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில மாவட்ட அமைப்பாளர், வேட்பாளர் பட்டியல் தொடர்பாக அதிருப்தி தெரிவித்ததை தொடர்ந்து இச் சிறு மாற்றங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ஹொக்கி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அணியினருக்கும் வட்டு ஒல்ட் கோல்ட்ஸ் அணியினருக்கும் இடையிலானமாபெரும்ஹொக்கி ஆட்டம் வட்டுக்கோட்டை பிறவுண்மை தானத்தில் நடைபெறவுள்ளது. இவ் ஆட்டத்தில் பல்கலைக் கழக அணிக்கு எஸ்.நோபின் சுரேந்திரனும், ஒல்ட் கோல்ட்ஸ் அணிக்கு பி.சயந்தகுமாரும் தலைமை வகிப்பர்நாளைதிங்கட் கிழமை மாலை 4 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (05)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ்இயங்கும் நிவேதா பாலர் பாடசாலையின் வளர்ச்சிக்காக புத்தூர் கிழக்கு விக்னேஸ்வர விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மாட்டு வண்டிசவாரிப்போட்டி நடைபெறவுள்ளது.

---

சிமப் புலவர்க்கான நகரம் 'போகவேண்டுமென்று இருக்கிறாயே! நாங்கள் பச்சிமப் புலவர்க்கான நகரத்தினுள் வசிக்கிறோம். இப்போது சில காரியார்த்தமாக இங்கு வந்தோம். நாங்கள் இப்போது அவ்விடம் போகின்றோம். நீயும் எங்களுடன் புறப்படு; வேண்டிய சௌகரியங்கள் செய்கின்றோம்.' என்றார் உடனே அவ்வம்மையார் முருகப் பெருமானிடம் ''சுவாமி! பச்சிமப் புலவர்க்கான நகரமென்பது எவ்விடமிருக்கிறதென்று'' கேட்டார். அதற்கு முருகப்பெருமான் ''அந்நகரமானது இலங்கை மாநகரில் யாழ்ப்பாணம் சமீபமிருக்கிறது'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

உடனே யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலிருந்த சபாபதிச் செட்டியார் மகன் முத்துக்குமாரச் செட்டியாருக்கு ''பச்சிமப் புலவர்க்கான நகரம் என்பது யாழ்ப்பாணம் சமீபம் எவ்விடம் இருக்கிற'' தென்று கடிதம் எழுதினார். பருத்தித்துறையிலிருந்த வித்துவான் வ. கோவிந்தபிள்ளை என்ற குமாரசுவாமிப் புலவர் 'பச்சிமப் புலவர்கான நகரம்' என்ற சமஸ்கிருத பதத்திற்கு 'புலோலி' தமிழ்ப் பதம் பொருள் என்று கூறியதாக முத்துக்குமாரச் செட்டியார் பதிற்கடிதமனுப்பினார்.

உடனே சுற்றத்தாரோடு 1911ஆம் ஆண்டு பச்சிமப் புலவர்க்கான நகரத்தை நாடி கொழும்பு வந்து சேர்ந்தார். அப்போது அவ்விடமிருந்த கைலாசபிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் மணியமாயிருந்த வி. எம். முத்துக்குமாரு முதலியாரவர்கள் பெருமுதவியாலும் கலியுகவரதராகிய ஸ்கந்தமூர்த்தி சக்கர ரூபமாயவதரித்திருக்கும் பச்சிமப் புலவர்க்கான நகரம் வந்தடைந்தார். புலோலி மேற்கிலிருந்த கு. சின்னப்ப உடையாரென்ற வேலாயுத உடையாரவர்களும், உலாந்தா G. C. கணபதிப்பிள்ளையவர்களும் இன்னும் சில அன்பர்களும் இவருக்கு உறுதுணையாக திவ்விய மூர்த்தத்தை தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவினார்கள். பதினொரு தினங்கள் வரை தேடி பன்னிரு கையன் கிருபையால் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்திலன்று யாவரும் தரிசிக்கும் பொருட்டு கண்டுபிடிக்கப்பட்டது. உடனே சுயம்புவான சக்கரமூர்த்திக்கு அபிஷேகமும், அர்ச்சனையும் செய்தார். பின் சக்கரத்தைத் தகட்டிலே வரைந்து கொண்டு திருநெல்வேலி திரும்பினார்.

அவ்வித உத்தரவின்பேரில் சக்கரத்தைப் பூஜித்து வருகையில் பதின்மூன்று ஆண்டுகள் கழிந்த பின் 1924-ம் ஆண்டு மூன்றாம் முறையாக முருகப்பெருமான் அம்மையாரின் கனவிலே தோன்றினான். ''சக்கரத்தின் மகிமை தெரியாமல் பூஜித்து வருகிறாயே!'' என்று மகிமையை எடுத்து விளக்கினார். அது எவ்விதமெனில், சூரியனைப் பார்க்கிலும் அவரது கிரணங்களிற்கு எவ்விதம் காந்தி அதிகமோ அதுபோல, நான் அர்ச்சா ரூபமாய் அமர்ந்திருக்கும் ஸ்தலங்களைப் பார்க்கிலும் சக்கர ரூபத்தோடு சுயம்புவாக அவதரித்திருக்கும் ஸ்தலத்தில் ஸாந்நித்யம் அதிகம் நீ அந்தத் தலத்திலே ஆலயத் திருப்பணி செய்வாய் என்றும், இவ்வித இரகசியங்களை நான் உன்னிடம் சொல்லியதுபோல் நீ உலகத்தாரிற்கெல்லாம் தெரிவித்து என்மேல் பக்தி உண்டாகும்படி போதிக்கும்படியும் வேண்டியருளினார் இக்கனவின் பின் லோகாம்பாள் அம்மையார் துண்டுப் பிரசுரத்தின் மூலம் அடியார்களிற்கு வெளியிட்டார்.

இறைவன் சித்தத்தினால் லோகாம்பாள் அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க இப்புண்ணிய ஸ்தலத்திற்கு உபய கதிர்காமம் என்று பெயரிடப்பட்டது. இவைதான் உபய கதிர்காம முருகனின் அற்புதத் தோற்றம் பற்றிய வரலாறாகும். தென்னிந்திய அடியாள் மூலம் ஈழத்திலே தென்புலோலி நகரிலே அவ்வடியாளைக் கொண்டு ஆலயம் அமைப்பித்த புதுமை வேறெங்குமே இடம்பெற்றதில்லை. அன்று சக்கரம் அமைந்த பாறைக்கு அடையாளமாய் அமைந்திருந்த விளாமரம் இன்றில்லை. ஆனால் அதனருகே இன்னோர் விளாமரம் தானே தோன்றி வளர்ந்துநிற்கின்றது. இவற்றை விளாத்தியான் அல்லது விளாத்தீஸ்வரர்என்று அடியார்கள் வணங்கி வருகின்றனர். சுயம்புவான சக்கர சண்முகனுக்கு அருகே சுயம்புவான விளாத்தீஸ்வரனும் அமர்ந்து அருள்புரியும் அற்புதத் திருத்தலமே உபயகதிர்காமமாகும். தென்னிலங்கையிலுள்ள கதிர்காமத்திற்கு தமிழடியார்கள் செல்ல முடியாததொரு காலகட்டத்தை அன்றேயறிந்த இறைவன் அவ்வடியார்களிற்காக அமைத்த ஸ்தலமேபிதுவாகும். இவ்வாலயத்தின் மகிமை அடியார்கள் அறியாத வண்ணம் மூடுண்டு கிடந்தது. தேவாரப் புகழ்பெற்ற திருக்கேதீச்சரம் என்னும் ஸ்தலத்தின் மகிமையை சைவ மக்கள் எவருமே அறிந்திராத பொழுது ஆறுமுகநாவலர் அவர்கள் ''தேன் பொந்தொன்றுண்டு. அதைத் தேடிச் செல்லுங்கள்'' என்றொரு பிரசுரத்தின் மூலம் அடியார்களிற்கு அதையெடுத்து வெளிப்படுத்தினார். அதுபோல உபய கதிர்காமத் திருத்தலத்தின் மகிமையை ஈழத்து அடியார்களிற்கு எடுத்துரைப்பதற்கு ஓர் ஆறுமுகநாவலர் இன்றில்லை என்பது உண்மைதான். ஆலயம் அமைக்கப்பட்டு இவ்வாலயம் தோன்றி எண்பத்துமூன்றாண்டுகள் கழிந்து விட்டன. சுயம்புவான சக்கர சண்முகனின் அருள் மகிமை இன்றுதான் ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன. ஈழத்தடியார்களின் கதிர்காமமாக இவ்வாலயம் சிறப்புற்று விளங்குமென்பது ஐயத்திற்கேயிடமில்லை. குன்றுதோறாடும் குமரன் பாறையொன்றிலே சக்கர வடிவிலே அமர்ந்திருக்கின்ற சிறப்பினை நேரிலே தரிசித்து முருகப்பெருமானின் அருள்பெற்று இன்னல்கள் நீக்கி இனிதே வாழ வேண்டும் என்று அடியார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்று 10-07-94 ஞாயிற்றுக்கிழமை உபயகதிர்காம முருகனின் அலங்கார உற்சவ கொடியேற்றம் மிகவும் சிறப்பாக ஆரம்பமாகிறது. வேட்டை, சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய உற்சவங்கள் மிகவும் சிறப்பாக முறையே, 21-07-94, 22-07-94, 23-07-94 24-07-94 நடைபெறும். தேர் உற்சவம் காலை 8 மணிக்கும், தீர்த்த உற்சவம் காலை 9 மணிக்கும் நடைபெறும்.

**உபயகதிர்காம புனருத்தாரண சபையின்**
**பரிபாலன சபை**

(சி-9789)

---

கைதடி-யாழ்)

**மாயவன்** (சங்கரப்பிள்ளை கனகசிங்கம்-பாலாவி தெற்கு, கொடிகாமம்-யாழ்)

**சத்தியன்** (பூர்வானந்தசர்மா பாலரூபசர்மா துன்னாலைவடக்கு,கரவெட்டி-யாழ்)

**ரமேஸ்** (தம்பித்துரை முத்துக்குமாரு-சிறுவிளான், இளவாலை-யாழ்)

1992-ம் ஆண்டு இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

முன்னாள் தீவகத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத்தளபதியுமான

**மேஜர் கிண்ணி-அசோகன்** (கந்தசாமித்துரை ரவீந்திரன் வேம்படி-வல்வெட்டித்துறை)

யாழ்-அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப் நாவலன்** (முனியாண்டி குமார்-சிவபுரம், மல்லாவி, மாங்குளம்-முல்லைத்தீவு)

**கப்டன் லுக்மன்-செங்கதிர்-செந்தில்** (வலிதியான் சின்னத்தம்பி-மணற்காடு, குடத்தனை-யாழ்)

**லெப்.சுடரொளி/தீபன்** (குழந்தைவடிவேல் ரமேஸ்-2-ம் குறுக்குத்தெரு-பருத்தித்துறை)

**2-ம்லெப்.இந்திரன்** (மயில்வாகனம் சந்திரன்-முள்ளிவீதி, அரியாலை-யாழ்)

யாழ்-பலாலியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய.

**2-ம் லெப்.அருள்நம்பி** (மரியதாஸ் ஜோன்சன்-கொய்யாத்தோட்டம்-யாழ்)

1993 ம் ஆண்டு மட்டு-மினுமினுத்த வெளிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்த போது ஏற்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் உதயபாலன்** (கந்தசாமி உதயகுமார்-கிரான்-மட்டு)

**பார்த்திபராஜன்** (கணேசன் யுகதீஸ்வரன்-திருக்கோயில்-அம்பாறை)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9785)

# விளையாட்டு அரங்கு

வலயம் 02 - வலைப்பந்தாட்டப் போட்டி

## 17 வயதுக்கு கீழ் சம்பியன் பட்டத்தை மெதடிஸ் இலகுவாக தட்டிச்சென்றது

17 வயதுக்குட்பட்ட 1-ம் இடத்துக்கான போட்டி பலரும் எதிர்பார்த்ததைப் போல் அவ்வளவு சோபிக்கவில்லை என்றே கூறவேண்டும். ஆட்டம் ஆரம்பித்த திறமையான சாதுரியமான விளையாட்டால் இடைவேளையின் போது 14-5 என்ற நிலையில் மெதடிஸ் முன்னணி வகித்தது.

இடைவேளையின் பின்பும் டிஸ் அணி 29-09 என்ற நிலையில் இலகுவாக வெற்றியீட்டிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாம் நான்காம் இடத்துக்கான போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும்,



17 வயதிற்கு கீழ்ப்பட்ட மெதடிஸ் மகளிர் அணி

போது ஓரளவு ஈடு கொடுக்கும் போல் காணப்பட்ட வட இந்து அணி, மெதடிஸின் வேகமான விளையாட்டுக்கு ஈடுகொடுக்க முடியாது திண்டாடியது. மெதடிஸ் அணியின் முன்னணி வீரர்களின் ஆட்டம் மெதடிஸ் அணி சார்பாகவே காணப்பட்டது. மெதடிஸ் அணியின் வீரர்களுக்கு ஈடு கொடுக்க முடியாது சோர்ந்த நிலையிலேயே வட இந்து அணி விளையாடியது. இறுதியில் மெதசண்டிலிப்பாய் இந்துவும் மோதின. மேலதிக நேரம் வரை சென்ற இவ்வாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து 15-12 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

# மாவட்டப்போட்டியை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றோம்

### பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் வலைப்பந்தாட்ட அணித்தலைவர்கள்

வலயம் இரண்டு வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டிகள் முடிவடைந்து, தற்போது மாவட்ட மட்டப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வேளையில் வலயம் இரண்டில் 17,19 வயதுப் பிரிவு இரண்டிலும் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்ட பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி அணித்தலைவிகள், பயிற்றுநர் திருமதி அல்லி தேவராஜா ஆகியோரை அவர்களுடைய கல்லூரியில் சந்தித்து உரையாடினோம். அணித்தலைவிகளுடன் கலந்துரையாட அதிபரும், பயிற்றுநரும் எமக்குப் பெரிதும் உதவிசெய்தனர்.

17 வயதுப் பிரிவு அணித்தலைவி எஸ். நிர்த்தகலாவிடம், இறுதியாட்டம் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டோம். தாங்கள் உடுவில் மகளிர் கல்லூரியை இலகுவாகத் தோற்கடித்து பலமானதொரு நிலையில் இறுதியாட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரியைச் சந்தித்ததாகக் கூறும் இவர் குறிப்பிடத்தக்க முறையில் 29-9 என்ற புள்ளிக்கணக்கில் தாம் வெற்றியைப் பெற்றுக் கொண்டதாகக்கூறுகின்றார் தங்கள் அணியில் எல்லோருமே திறமையானவர்கள என்றும், S. கலைவாணி, (GA S. பிரேமலஷ்மி (C) இருவரும் திறமை மிக்க எமது அணியின் வீச்சுக் கூடியவர்க என்றும் நிர்த்தகலா அபிப்பிராயம் தெரிவித்தார். இரண்டாம் வருடமாக 17 வயதுப் பிரிவில் ஆடும் இவர் தம் வெற்றிக்குக் காரணம் பயிற்றுநரின் திட்ட மிட்ட முறையிலான பயிற்சி என்று கூறுகின்றார் வலைப்பந்தாட்ட வட்டாரங்களில் பிரபல்யமானவராகத்திகழும்கலைவாணியும் தன் திறமைக்குக் காரணம் பயிற்றுநரே என்று கூறுகின்றார்.

வரப் போகும் மாவட்ட மட்டப் போட்டிகளில் எவ்வாறு எதிரணிகளை எதிர்கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்டோம். மிக நம்பிக்கையுடன் இருப்பதாகக் கூறும் இவர், பயிற்சியில் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கின்றார்.

19 வயதுப் பிரிவின் தலைவி எஸ். தமிழரசியிடம் உரையாடிய போது அவரிடம் அனுபவமுதிர்ச்சி காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது நிதானமாகப் பதில் கூறும் அவர் கடந்தவருடம் அணியில் அங்கம் வகித்தவர். தாம் விக்னேஸ்வராக்கல்லூரி (32-3) இராமநாதன் கல்லூரி இரண்டையும் இலகுவாகத் தோற்கடித்து இறுதிப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியுடன் மோதியதாகக்கூறும் இவர் மிகத்தரமான அணியொன்றுடன் மோதியதாக ஒப்புக்கொள்கிறார், கோட்டமட்டப் போட்டியிலும் கூட தரமானதொரு அணியான வட இந்து மகளிர் கல்லூரியுடன் மோதியதை நினைவு கூர்கிறார். தம் அணியின் ஒத்துழைப்பு பயிற்சிபயிற்றுனரின் முயற்சி அதிபரின் ஆர்வம் என்றவாறு தம் வெற்றிக்குக் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகும் தமிழரசி தன் அணியின் பூ.மைதிலியின் (GA) தாக்கலான விளையாட்டையும் பெருமையுடன் குறிப்பிடுகின்றார்

பயிற்றுநருடன்உரையாடிய போது சில வருட இடைவெளியின் பின்னர் மீளவும் 92ல்தான் இப்பிரிவுவலைப்பந்தாட்ட அணிகளையும் ஆரம்பித்தோம்.93 மாவட்டப்போட்டிகளிலேயேஇரு அணிகளும் மாவட்டச் சாம்பியன்களாக வந்தன என்று பெருமிதப்படும் இவர் தனது பயிற்சி முறைபற்றி குறிப்பிடுகிறார். "எனக்கு நீண்டநேரப்பயிற்சியில் நம்பிக்கை குறைவு நான் நேரம் குறைவாக இருந்தாலும் தொடர்பயிற்சி என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன் இதுவே எம் அணிகளின் வெற்றிக்குக் காரணம். காலைவேளைகளில் பயிற்சியை எப்போதும் வைத்துக்கொள்கின்றேன். வீராங்கனைகளின் உற்சாகமும் ஆர்வமும் என்னை முற்றாகஅவர்களிடம் இணைந்துசெயற்படவைக்கின்றது" எனும் இவர் வட இந்து மகளிர் கல்லூரியின் பெருமைமிக்க பழைய மாணவி. 75,76களில் அகிலஇலங்கை வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வட இந்து அகில இலங்கை வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தபோது அதன் அணித் தலைவி. அதோடு 79-ல் ஆசிரியப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் போது வடமாகாண வலைப்பந்தாட்ட அணியின் தலைவியும்கூடஉயர்தரஅனுபவமும் ஆற்றலும் கொண்ட திருமதி அல்லி தேவராசா வைப்பற்றி வீராங்கனைபோட்டிபோட்டுக்கொண்டுதகவல்களைத் தந்தார்கள். பயிற்றுநருடன் பல்வேறு விளையாட்டுத்துறை பிரச்சினைகள் பற்றியுரையாடிய போது அதிபர் அவர்களையும் கருத்துக்கள் கேட்டோம் ஒவ்வொரு முறையும் போட்டிக்காக நீர்வேலி சென்றுவர 1500/- தேவைப்படுகின்றது ஒரு சுற்றுப்போட்டியென்று வந்து விட்டால் போக்குவரத்துக்கும் மட்டும் 10000/- வரை செலவாகும். மேலும் இதர செலவுகள் .....? என்று கூறுகின்றார். பழையமாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம், எமது வசதிக்கட்டணம் என்பவற்றில் இருந்து சமாளிக்கிறோம். இருந்தும் நிதிநிலை மோசம்தான் என்று கூறும் இவர்கள் மாணவர்களின் ஆர்வம் பெரிது, அவர்களின் திறமை ஆற்றல் என்பவற்றின் முன்னால் இதனைப் பொருட்படுத்த முடியவில்லை சுமையென்றாலும் கூட எமது பிள்ளைகளுக்காக அதனைத் தாங்கத் தீர்மானித்து விட்டோம் என்கிறார்கள்.

இக்கருத்தை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்ட நாம், இறுதியாக வினாவினோம். மாவட்டப் போட்டிகளை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறீர்கள் ..? பயிற்றுநர் கருத்துக் கூறும்போது எம் அணிகளின் திறமையில் எமக்குப் பூரண நம்பிக்கையுண்டு. 19 வயதுப்பிரிவில் ஒரு வீராங்கனை காயப்பட்டுள்ளமை சிறிதுபின்னடைவுதான். பொதுவாக எதிரணிகளைக் குறைத்து மதிப்பிடுவது என்பது எம்மிடம் இல்லை. ஒவ்வொரு அணியையும் பலமான அணியாகக் கருதியே போட்டியிடுவோம். களத்தில் விவேகம், நுட்பம் ஆற்றல் என்பவை வெற்றியைத் தீர்மானிக்கும் என்றார்.

மிகவும் சுமுகமாகவும், சகோதரபாசத்துடன் இக்கலந்துரையாடல் நடைபெற உதவிய அதிபர் பயிற்றுநருடன். வீராங்கனைகளுக்கும் நன்றியும், வாழ்த்துக்களும்கூறி விடைபெற்றுக்கொண்டோம்.

# மரடோனா இல்லாத ஆர்ஜென்டீனா; தமது நிலையை காக்க முடியவில்லை!

### இரண்டாம் சுற்று ஆட்டங்கள் பற்றிய ஒரு நோக்கு

உலகக் கிண்ண உதைபந்தாட்டம் '94-ன் இரண்டாவது சுற்று முடிவடைந்துள்ளது இதில் கலந்து கொண்... காக கிளீன்ஸ்மன் இரண்டு கோல்களும் வொலர் ஒரு கோலும் போட்டனர். ... போட்டு 2-1 என்றவாறு முன்னணி வகித்தது. ருமேனியா தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை ... ஆர்ஜென்டீனா நிச்சயமான சந்தர்ப்பங்களைத் தவறவிட்டார்கள். ஆர்ஜென்டீனா ...

வலயம் 02-வலைப்பந்தாட்ட போட்டி (19 வயதிற்குக் கீழ்)

## பரபரப்பான போட்டியில்

# பரபரப்பான போட்டியில் பரு. மெதடிஸ் வென்றது

19 வயதின 1-ம் இடத்துக் கான இப்போட்டியில் பலம் மிக்க உடுவில் மகளிர் கல்லூரி வெற்றியீட்டும் எனப்பரவ லாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் ஆட்டம் தொடங் கியதும் உடுவில் மகளிர் கல் லூரி தன் திறமையை காட் டிய போதிலும் சிறிது நேரத் தின் பின் மெதடிஸ் அணி ஈடுகொடுத்து ஆடத் தொட ங்கியதும் ஆட்டம் களைகட் டத் தொடங்கியது. இரு அணிகளும் மாறி மாறி புள் ளிகள் பெற்ற வண்ணமே இருந்தன. இடைவேளையின் போது 11 - 11 என்ற சம நிலையில் இருந்தன.

இடைவேளையின் பின் மெதடிஸ் அணி வேகமாகவும் சாதுரியமாகவும் விளையா டத் தொடங்கியதும் உடுவில் மகளிர் கல்லூரியும் அதற்கே ற்றாற்போல் ஆட போட்டி இரசிகர்களுக்கு பெரு விருந் தாக அமைந்தது. இறுதியில் இரு அணிகளும் சம நிலை யில் இருந்ததால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதில் மெதடிஸ் அணியின் வேகமான, திறமையான விளையாட்டு அவ் அணிக்கு 27 - 26 என்ற கணக்கில் வெற்றியை தேடிக் கொடுத் தது.



19 வயதிற்கு கீழ்ப்பட்ட மெதடிஸ் மகளிர் அணி

19 வயதின் 3ம், 4ம் இட த்துக்கான போட்டிகள் வட இந்துவிற்கும், இராமநாதன் கல்லூரிக்கும் இடையில் நடை பெற்றது. இப் போட்டியில் வட இந்து 30 - 12 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

---

ளது இதில் கலந்து கொண்ட 16 நாடுகளில் 8 நாடுகள் கால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

இரண்டாவது சுற்றில் முத லாவதாக ஜேர்மனி பெல்ஜிய த்தை எதிர்த்தாடியது. இவ் வாட்டத்தில் போட்டி தொட



ங்கிய 6 வது நிமிடத்தில் ஜேர் மனி ஒரு கோல் போட்டது. உடனடியாகவே பெல்ஜியம் ஒரு கோலைப் போட்டுச் சம மாக்கியது. மீண்டும் பத்தா வது நிமிடத்தில் ஜேர்மனி தனது இரண்டாவது கோலை யும் போட்டது. பத்து நிமிட த்துக்குள் மூன்று கோல்கள் மொத்தமாகப் போடப்பட் டது கவனிக்கத்தக்கதாகும். பெல்ஜியம் இடை வேளை வரை ஜேர்மனிக்கு பெரும் அழுத்தம் கொடுத்தே ஆடி னார்கள். இருந்தும் கூட ஜேர்மனி இடைவேளையின் முன்பே 3-1 என்ற வகையில் முன்னணியில் திகழ்ந்தார்கள் இடைவேளையின் பின்னர் விளையாட்டு உயர்தரமாக இருந்தது பெல்ஜியம் விட்டுக் கொடுப்பதாயில்லை. மிகச் சிறப்பாக ஆடினார்கள். இறு தியாக 90 வது நிமிடத்தில் பெல்ஜியம் ஒரு கோலைப் போட்டுக் கொண்டது. இறுதி யில் 3-2 என்றவாறு ஜேர்மனி வெற்றிகண்டது. ஜேர்மனிக்

இரண்டாவது ஆட்டம் சுவி ட்சர்லாந்திற்கும் ஸ்பானியாவு க்கும் இடையிலானது. இர ண்டுமே சமபலமுள்ள அணி கள். இருந்தும் ஸ்பானியா 3-0 என்றவாறு வெற்றிகண் டது. இருபகுதியும் நிச்சய மான சந்தர்ப்பங்களைத் தவ றவிட்டாலும் சுவிட்சர்லாந்து தவறவிட்ட சந்தர்ப்பங்கள் அவர்களது வெற்றியைப் பறி த்து விட்டது. இத்தோடு இறுதி நேரத்தில் ஸ்பானியா பெற்ற பெனால்டி உதை சுவி ட்சர்லாந்தை நிச்சயமாக போட்டியில் இருந்து நீக்கிவி ட்டது.

**நிர்மலன்**

சுவீடன்-சவூதிஅரேபியாவி ற்கும் இடையிலான போட்டி யில் சுவீடன் வெற்றிகண் டது. சுவீடனின் விளையாட்டு சகலவகையிலும் உயர்வாக இருந்தமைகுறிப்பிடத்தக்கது. சுவீடனின் அன்டர்சன் மிகச் சிறப்பான வீரராக இனங் காணப்பட்டார். சவூதி அரே பியா சிறப்பாகவே முயன்றும் கூட 3-1 வகையில் சுவீ டன் வெற்றியை உறுதிப் படுத்திக் கொண்டது. சவூதி யின் ஒரே ஒரு கோல் 85-வது நிமிடத்தில் பெறப்பட சுவீ டன் 88-வது நிமிடத்திலும் ஒரு கோலைப் பெற்றுக் கொ ண்டது.

இரண்டாவது சுற்றில் மிக ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட ஆட்டம் ஆர்ஜென்டீன ருமே னிய ஆட்டமாகும். மரடோ னா இல்லாத ஆர்ஜென்டீனா என்ன செய்யும் என்ற ஒரு பரபரப்பு இருக்கவே செய் தது. ஆட்டம் தொடங்கி 10-வதுநிமிடத்தில் ருமேனியா ஒரு கோல் போட அடுத்த சில நிமிடங்களில் பெனால்டி உதை ஒன்றைப் பெற்று ஆர் ஜென்டீனா ஆட்டத்தைச் சமப்படுத்தியது. ஆனால் ருமேனியா இரண்டு நிமிடங் களில் இன்னொரு கோல்

தர்ப்பங்களை சரியாகப் பயன் படுத்தினார்கள். ஆனால் வில் படிஸ்டுடாவின் அபார

(4ஆம் பக்கம் பார்க்க)

---

## யாழ். மாவட்ட பாடசாலை மெய் வல்லுநர் போட்டி'94

வலயம் 1; சிறந்த வீரர்கள்

| பிரிவு | பெயர் | பாடசாலை | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 15 வயது | ச.சுரேன் | யாழ். இந்துக்கல்லூரி | 11 |
| 17 வயது | H நிருபன் | யாழ். சப்பத்தரிசியார் | 10 |
| | B.ரமணன் | யாழ். இந்துக்கல்லூரி | 10 |
| 19 வயது | ம. கஜேந்திரா | யாழ். கனகரத்தினம் ம ம.வி | 10 |
| | சு. சுகுமார் | யாழ். இந்துக்கல்லூரி | 10 |
| | ஆ. மகிரூடி | யாழ். இந்துக்கல்லூரி | 10 |
| | சி சுசீந்திரன் | யாழ். இந்துக்கல்லூரி | 10 |

சிறந்த வீராங்கனைகள்

| பிரிவு | பெயர் | பாடசாலை | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 15 வயது | க. நிஜா | திருக்குடும்ப கன்னியர் மடம் | 13 |
| 17 வயது | யோ. ஜாமினி | அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் | 13 |
| 19 வயது | க. மிதிலா | திருக்குடும்பகன்னியர்மடம் | 11 |

கோட்டரீதியாக பெற்ற புள்ளிகள்

| | |
|---|---|
| வேலணை | 06 |
| சாவகச்சேரி | 131 |
| நல்லூர் | 183 |
| யாழ்ப்பாணம் | 346 |

வலயம் 2; சிறந்த வீரர்கள்

| பிரிவு | பெயர் | பாடசாலை | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 15 வயது | வ. சுகந்தன் | இமையாணன் அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலை | 13 |
| 17 வயது | தி. கணேஸ் | ஹாட்லிக் கல்லூரி | 13 |
| 19 வயது | க. சதீஸ் | உடுப்பிட்டி அ மி. க. | 15 |

சிறந்த வீராங்கனைகள்

| பிரிவு | பெயர் | பாடசாலை | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| 15 வயது | இ. நர்மதா | மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி | 10 |
| 17 வயது | இ. சிவகௌரி | புற்றளை ம. வி. | 13 |
| 19 வயது | பூ. மைதிலி | மெதடிஸ்த பெண்கள் உயர்கல்லூரி | 15 |

கோட்ட ரீதியாக பெற்ற புள்ளிகள்

| | |
|---|---|
| பருத்தித்துறை | 199 |
| கரவெட்டி | 169 |
| தெல்லிப்பழை | 88 |

அஞ்சலோட்டம்

| கோட்டம் | பால் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| கரவெட்டி | ஆண் | 36 |
| உடுவில் | பெண் | 23 |

பேராசிரியர்
அ. துரைராசா அவர்களின்
## 31-ம் நாள் இதய அஞ்சலி



எம் உள்ளம் உவந்த நல்மனிதன்
எம் உலகத்தவர் உவக்கும் மாமனிதன்
மண்ணியல் தொழில்நுட்ப விஞ்ஞானம்
அறிதொறும் அறிவுவக்கும் விஞ்ஞானி
எனப் பல வேடம் தாங்கி
மண்ணில் நல்ல எண்ணம்
வாழ்ந்த எம் கிராமிய மனிதன்
எம் கல்லூரியின் நல்ல மாணவன்
பேராசிரியர் அ. துரைராசா அவர்களின்
நல்லாத்மா சிவத்துடன் கலக்கும்
என்பது எம் உறுதி.

ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் மன்றம்
(சி-9788)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவு
**2-ம் லெப் இந்திரன்**
**மயில்வாகனம் லயன் சந்திரன்**
முள்ளி வீதி அரியாலை

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 06-08 1975 | 10-07-1992 |

இந்திரன்
நீ மரணித்து ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறாதையா எங்கள் துயர்
இவரோடு வீரச்சாவு அடைந்த போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

இந்திரனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (10-07-1994 ஞாயிற்றுக்கிழமை சகபோராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ம. சிறிகாந்தன்
இல. 98 பூம்புகார்
அரியாலை

குடும்பத்தினர்
கஸ்தூரி அழகுசாதன
விற்பனை அகம்
74, மேற்கு சந்தை(உற்புறம்)
யாழ்ப்பாணம்

(8758)

## மரடோனா

மான சுமையைத்தானே சுமந்த ஆட்டம் மிகவும் பிரமாதமானதாகும். இறுதியில் ரூமேனியாவின் 3-2 வெற்றியை படிஸ்டூடாவினாலும் தடுக்க இயலவில்லை

நெதர்லாந்தும் அயர்லாந்தும் சந்தித்த போட்டியில் நெதர்லாந்து 2-0 என்றவாறு வெற்றிகண்டது. இருதரப்பு விளையாட்டும் உயர்தரமானதாக இருந்தது. இடைவேளையின் முன்பே நெதர்லாந்து இரண்டு கோல்களையும் போட்டு விட்டது அதன் பின் இருதரப்பும் தம் இலக்கினையடைய முயன்ற பாணி சிறப்பாக இருந்தது

உலகக்கிண்ணத்துடன் மிக நெருக்கமாகப் பேசப்படும் அணி பிரேசில். சந்தர்ப்பம் மிகக் குறைந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் ஐ அமெரிக்க அணியினர். ஆனால் இடைவேளையின் பின்னும் அரைவாசி நேரம் கழிந்த பின்பே பிரேசில் ஒரு கோல் போட முடிந்தது. அவ்வாட்டத்தில் போடப்பட்ட ஒரேயொரு கோல் அதுதான் ஐ. அமெரிக்க கோல் காப்புத் திறன் குறிப்பிடத்தக்கது. றே, பெபிடோ றொமாரியோ போன்றோரைக் கொண்ட பிரேசிலிற்கு ஐ அமெரிக்கர் மிகவும் பாரிய அழுத்தத்தைக் கொடுத்தனர். 1-0 என ஐ. அமெரிக்கா தோற்றாலும் கூட அதிலும்அவர்களுக்குஒரு வெற்றியுண்டு.

'94 உலகக் கிண்ணத்தில் இதுவரையில் நடைபெற்ற ஆட்டங்களில் மேலதிக நேரத்திற்கு ஆட்டத்தைக் கொண்டுபோன ஆட்டங்கள் இரண்டு. ஒன்று பல்கேரியா, மெக்சிக்கோ அடுத்தது இத்தாலி. நைஜீரியா பல்கேரியா, மெக்சிக்கோ இரு அணிகளும் தமக் கொதுக்கப்பட்ட நேரத்தில் தலா ஒருகோலையே போட முடிந்தது இதேவேளை இரண்டு அணியிலிருந்து ஒவ்வொருவர்மைதானத்தைவிட்டுவெளியேற்றப்பட்டார்கள். இருதரப்பும் குறிப்பிடக் கூடிய அளவில் திறமையான அணிகள் மேலதிக நேரம் முடிந்தபோதும் முடிவில் மாற்றம் ஏற்படவில்லை எனவே பெனால்டி உதைமூலம் முடிவு தீர்மானிக்கப்பட்டது இதன்படி பல்கேரியா 4-2 என்றவாறு வெற்றி பெற்றது.

இத்தாலி நைஜீரியா ஆட்டம் எதுர்பாராத முடிவை ஏற்படுத்தியதொரு ஆட்டம். 27 வது நிமிடத்தில் நைஜீரியா இத்தாலிக்கு எதிரான முதலாவது கோலைப் போட்டது. 1-0 என்ற நைஜீரியாவின் முன்னணி நிலையை உடைக்க இத்தாலி மிகுந்த பிரயத்தனப்பட்டது. இத்தாலியின் உயர்தரமானதொரு விளையாட்டை இங்கு காணமுடிந்தது றொபர்டோ பாசியோ உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரன் என்பதை இவ்வாட்டம் முழுவதிலும்நிரூபித்தார் ஆட்டம் முடிய ஒரேயொரு நிமிடம் இருக்கும் போது ஒரு கோல் போட்டு சமமாக்கியவர் றொபோட்டோ பாசியோ இதன் பின் மேலதிக நேரத்தில் கிடைத்த பெனால்டி உதையை கோலாக மாற்றிய வரும் இவரே 2-1 கோல்கணக்கில் இத்தாலியை கால் இறுதி ஆட்டத்துக்குக் கொண்டு சென்றவரும் இவரே. டினோபாசியோவும் அற்புதமாக ஆடி இத்தாலியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

### உயிரிழந்தோருக்கு நட்ட ஈடு

வளைகுடா யுத்தத்தினால் உயிரிழந்த முப்பத்தியாறு இலங்கையருக்கான நட்டஈடு இம்மாதம் 12ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும் உடனடியாக இவர்கள் சகல ஆவணங்களுடனும் வெளிவிவகார அமைச்சிற்கு வருமாறும் கோரப்பட்டுள்ளது.

### திங்கள் தாக்கல்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வேட்பாளர் பட்டியல் தயாரிகப்பட்டு முடிவடைந்து விட்டதாகவும் திங்கட்கிழமை ஒவ்வொரு மாவட்டத்திலும் வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யப்படும் எனவும் சுதந்திரக் கட்சிப் பொதுச்செயலாளர் தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

### இராணுவம் தடை

சித்தாண்டி எல்லையோரத்திலுள்ள சந்தனமடு நீரோடையின் இரு பகுதிகளிலும் விவசாயம் செய்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

மிக நீண்ட காலமாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்த மக்களை உடனடியாக வெளியேற வேண்டுமெனவும் இராணுவத்தினர் அச்சுறுத்தி வருகினறனர்.

# கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின்
# 4-ம் ஆண்டு நினைவு நாள்





காந்தரூபனே!
வேருக்கு விழுதுகளின் அஞ்சலிகள்.
உன் நிழலில் ஆறும்வரை
நாங்கள் உறவற்ற பறவைகள்.
கடலிலே நீ கரைந்து போகமுன்
தலைவனிடம் என்ன கேட்டாய்.
"என்னைப் போல் யாருமில்லாத
ஒரு உலகம்" கேட்டாய்
இந்தோ பார்
நாங்கள் உன் கனவுக்கு வடிவம்.
நீயும், நாங்களும்
ஒரு கூட்டுக் கிளிகள்.
முகம் தெரியாத அண்ணனே!
உன் நினைவை சுமந்து
வழித்தடம் பிசகாது நடப்போம்.

**காந்தரூபன் அறிவுச்சோலைப் பிள்ளைகள்**

(சி-9790)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

கள்வனும், தோட்டக்காரனும் ஒன்று சேர்ந்தால் விடியும்வரை திருடலாம்.

- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2021
தபால் பெட்டி எண்- 05

## திரிசங்கு நிலையில் சில தமிழ்க்குழுக்கள்

யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதென்பது ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்து தேர்தல் ஆதாயத்திற்கானதாகவும் இருக்கலாம். அல்லது அரசியல் யாப்பு நெருக்கடிக்கு உள்ளாகாமலும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இருக்கலாம். சிலவேளை இவை இரண்டிற்காகவும் கூட இருக்கலாம்.

ஆனால் தமிழ்க் குழுக்கள் சிலவற்றைப் பொறுத்து இது பெரும் சோதனைக்களமாக மாறிவிட்டது என்றே கொள்ளவேண்டும், அரசாங்கத்தின் முழுநேர எடுபிடிகளாகவும், ஏவல் வேலைகளைச் செய்பவர்களாகவும் உள்ள சில குழுக்களுக்கு தேர்தல் உபப்பளிப்பதாக இருப்பினும், இரண்டும் கெட்டான் நிலையில் உள்ள அதாவது அரசாங்கத்திற்கு ஆதரவான கொள்கையைக் கடைப்பிடித்துக்கொண்டு அதேசமயத்தில் அரசாங்கத்திற்கு தாம் ஆதரவு இல்லை எனக் காட்ட முற்பட்டுள்ள தமிழ்க் குழுக்களுக்கே தேர்தலானது பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாத ஒரு நிலையையே இத் தேர்தலில் எதிர்நோக்குகின்றனர்.

சிறிலங்கா அரசாங்கத்துடன் ஆயுதம் தாங்கி நிற்கும் தமிழ்க் குழுக்களைப் பொறுத்து இது என்றுமே கிடைக்க முடியாத அரிய சந்தர்ப்பம் ஆகும். இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள இப்பிரதேசத்தில் அரசாங்கத்துடன் இணைந்து அவர்கள் தேர்தலில் வெற்றி ஈட்டிவிட முடியும்.

தேர்தலில் அவ்வாறு வெற்றியீட்டுவதன் மூலம் தாம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று கூறுவதோடு மட்டுமல்ல, அதன் மூலம் வரும் அனுகூலங்களையும் அனுபவிக்க முடியும், கடந்த காலப் பாராளுமன்றத் தேர்தலிலும் இவ்வாறாக பாராளுமன்றம் சென்றவர்கள் பெரும் சலுகைகளை அனுபவித்தனர் என்பது சகலரும் அறிந்த விடயமே.

## ஐரோப்பாவுக்குள் புகமுயன்ற 138 இலங்கையர் பிடிபட்டனர்

(கொழும்பு)

ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமாகப் புக முயன்ற நூற்றுக்கும் அதிகமான இலங்கையர்கள் இத்தாலியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் தமிழர்கள் பெரும்பான்மையோர் எனக் கூறப்படுகிறது. ஜேர்மனிக்குள் புகுவதற்கென சென்ற இவர்கள் இத்தாலியின் தென்பகுதியில் வைத்து இறக்கி விடப்பட்டுள்ளனர். இத்தாலியில் இருந்து ஜேர்மனிக்குள் கடத்திச் செல்வதற்காக கடத்தல்காரர்களுக்கு சுமார் 4000 டாலர் வரை செலுத்தி இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 138 பேரைக் கொண்ட இக் குழுவில் பெரும்பாலானவர்களிடம் கடவுச் சீட்டுப் போன்ற ஆவணங்கள் கூட காணப்படவில்லை. இவர்கள் வர்த்தக கப்பல் ஒன்றிலிருந்து நள்ளிரவில் படகுகள் மூலம் கரைக்கு அனுப்பிவிடப்பட்டுள்ளனர்.

## யாழ். பல்கலைக் கழகத்தில் இரசாயனங்கள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த ஆறுமாத காலமாக இரசாயனவியல் பரிசோதனைகள் மேற்கொள்வதில் பலத்த சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பல்கலைக் கழகத்தில் இப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான இரசாயனப் பொருட்கள் கடந்த ஆறுமாத காலமாக கொழும்பிலிருந்து எடுத்து வரப்படாததினால் இவ் இரசாயனப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் வகுப்புகள் முடிந்தும் அவற்றுக்கான பரிசோதனைகளை செய்து பார்க்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 ராஜாங்க அமைச்சருக்கு பட்டியலில் இடமில்லை

(கொழும்பு)

ஐந்து இராஜாங்க அமைச்சர்களுக்கு இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கவில்லை என கட்சித் தலைமை காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் அறிவித்தல் வெளியானதைத் தொடர்ந்து இவர்கள் கட்சி மீது அதிருப்தி அடைந்து காணப்படுவதாகவும் இவர்கள் ஐ. தே. க.வில் இருந்து ஒதுங்கி வேறு கட்சிக்கு தமது ஆதரவையும் தெரிவித்து இருப்பதாக தெரிய வருகிறது.

## அதிபர்களுக்கான கூட்டம்

(கோப்பாய்)

மாணவர் சீருடை விநியோகம் தொடர்பாக ஆராயும் பொருட்டு கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை 11ம் திகதி பி. ப. 2. 30 மணிக்கு நடைபெறவுள்ளது

அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளும் படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன் கேட்டுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

## பொதுஜன ஐக்கிய முவுடன் தேர்தல் உடன்பாடு இல்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையே ஆன கூட்டு முறிவடைந்துவிட்டதாக மக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துளது.

கடந்த மூன்று நாட்களாக ஏற்பட்ட நீண்டநேர பேச்சுவார்த்தைகளின் முடிவில் இரு கட்சிகளும் தமது கொள்கை தொடர்பாக உடன்பாடுகளுக்கு வரத்தவறியதாலே மேற்படி கட்சிகளிடையே உறவு முறிவடைந்தது எனகட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## வடகொரிய ஜனாதிபதி மாரடைப்பால் மரணம்

வடகொரிய ஜனாதிபதி கெண்ஜொங் சொங் நேற்று முன்தினம் காலை மாரடைப்பால் காலமானார். 82 வயதான இவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் வடகொரியாவின் தலைவராக பதவி ஏற்றார். அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற காலத்தில் உலகத் தலைவர்களில் மிக வயது குறைந்த தலைவராக இருந்தார். இவர் கொரிய கிளர்ச்சியின் பின்

இவரின் மரணத்தினால் வடகொரிய - தென்கொரிய ராஜ தந்திர நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என நம்பப்படுகிறது.

இவரின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர். இவரின் மரணச்சடங்குகள் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறும் எனவும் அதுவரை வடகொரியாவில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீனவர் எல்லையை கடக்க இரு அரசுகளும் இணக்கம்

## ஐ. தே. க பட்டியலில் 13 இ. தொ. காவினர்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பான பேச்சுவார்த்தையில் கீழ்வரும் விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டதாக இ. தொ. கா தலைவர் தொண்டமான், கடந்த திங்களன்று நடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை வழங்குதல், இனப்பிரச்சினை தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட தொண்டா- அஷ்ரப் திட்டம், கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் தமிழர் கைதாவதை உடனடியாக நிறுத்துதல் என்பவையே அவை ஆகும் என அவர் தெரிவித்தார்.

ஐ. தே. க. தனது பட்டியலில் 13 இ. தொ. கா உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளும் எனவும் தொண்டமான் தெரிவித்தார்.

## பொது. ஐக்கிய முன்னணி வேட்பாளராக சிறிமானி

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பொதுஜனஐக்கிய முன்னணி வேட்பாளர்களின் ஒருவராக தான் போட்டியிடுவதாக சிறிமானி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திரிகயாளர் மகா நாடொன்றில் கலந்து கொண்ட அவர் எதிர்வரும் பொது தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டதாகவும் எனவே ஆகஸ்ட் 16க்குபின்னர் ஆட்சி அதிகாரம் கொண்ட கட்சியாக பொதுஜனஐக்கிய முன்னணி வரும் என்றும் இதில் சந்தேகம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுஜனஐக்கிய முன்னணியுடன் இணைந்து பதினாறு மாவட்டங்களில் போட்டியிடுவதாகவும் இதில் இருபத்தி ஒரு அபேட்சகர்கள் போட்டியிடுவதாக தெரிவித்த அவர் சகல இலங்கைப்பிரசைகளும் ஒன்றிணைந்துவாழும் நாடாக இருக்க வேண்டும் என்பதையே கொலைசெய்யப்பட்ட தனதுகணவர் லலித் அத்துலத்முதலி விரும்பினார் என்றும் இதனை நிறைவேற்றுவதற்கு பொதுஜனஐக்கிய முன்னணியுடன் ஒன்றிணைவதைத் தவிரவேறு ஒருவழியும் தனக்கு தென்படவில்லை என்றும மேலும் தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் சகல தேர்தல் கூட்டங்களிலும் தான் மக்களை சந்திப்பதாகவும் இதில் தனது கொள்கை தொடர்பாக மட்டுமே கருத்து தெரிவிப்பதாகவும் யாரையும் குறை கூறுவதோ அன்றி யார் மீதும் வசை பாடுவதோ இல்லை அதை தான் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொ. ஐ. முவுடன் இணைவுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

முஸ்லிம், காங்கிரஸ் பொது மக்கள் முன்னணியுடன் இணைவதை எதிர்த்து, முஸ்லிம் காங்கிரசின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த அல்ஹாஜ்

சென்றவர்கள் பெரும் சலுகைகளை அனுபவித்தனர் என்பது சகலரும் அறிந்த விடயமே.

இதேசமயம் இவர்களுக்கு இவ்வாறு கிடைக்கும் வெற்றியானது ஐ. தே. கட்சிக்கு பெரும் உதவி புரியக் கூடியதொன்றாகும். எதுவித கொள்கையு மற்று பாராளுமன்றம் வரும் இவர்களை தனிப்பட்ட சில சலுகைகளின் மூலம் திருப்திபடுத்திவிட முடியும் இதற்குப் பிரதி பலனாக ஐ. தே. கவிற்கு பாராளுமன்றத்தில் இவர்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை, இவர்களைப் பராமரிப்பதற்கு சிங்களத் தரப்பில் இருந்து வரும் எதிப்புக்களையும், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்று கூறிச் சமாளித்துவிட முடியும்.

இதேசமயம், இவ்வாறான ஆயுதக் குழுக்களுக்கும் தமது வருங்காலவாழ்க்கைக்கானவருவாயை உறுதி செய்ததாக அமையும். இதன் மூலம் தமது அரசியல் வாழ்வைத் தக்கவைத்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததுமாகும்.

ஆனால் அரசுடன் ஒட்டி உறவாடாதது போல் காட்டிக்கொள்ளும் தமிழ்க் குழுக்கள் இவ் விடயத்தில் தவித்துப் போயுள்ளன. இது தமது அரசியல் வாழ்க்கையை அழித்து விடும் என்றே அவை கருதுகின்றன. இந்நிலையிலேயே வடக்கில் தேர்தல் நடத்துவது குறித்து அவை நீதிமன்றம்வரை செல்வதற்கு முடிவு செய்துள்ளதாக அறிய வருகின்றது.

இதேசமயம் கடந்த தேர்தலின்போது இவர்களுக்கு கிடைத்த அனுபவம் அரசாங்கத்துடன் இணைந்துள்ள தமிழ்க் குழுக்களுடன் இணைந்து போட்டியிடுவதையும் தவிர்த்துள்ளது. ஈ. பி. ஆர். எல். எப்புடன் இணைந்ததை கூட்டணி மறந்து விடாது. இதன் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொதுப் பட்டியல் ஒன்றில் போட்டியிடுமாறு விடுத்த கோரிக்கையையும் இவர்கள் நிராகரித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கைப் பொறுத்து இன்றைய சூழ்நிலையில் தேர்தலுக்கு உகந்த சூழ்நிலை இல்லை என்பதை ஜனநாயக ரீதியான தேர்தல்கள் பற்றி அறிந்து கொண்டவர்கள் எவரும் மறுப்பின்றி ஏற்றுக் கொள்வர்.] வடக்கைப் பொறுத்து பாதுகாப்பு அமைச்சே இதனை உறுதி செய்துள்ளது. இருப்பினும் இன்று தமது அரசியல் வாழ்வை உறுதிசெய்து கொள்வதற்காக கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் போடும் போட்டியானது தமிழ் இனத்திற்கு அவர்கள் செய்யும் துரோகமாகக் கருதக் கூடியதே ஆகும். தமது அரசியல் வாழ்விற்காக மேற்கொள்ளும் காட்டிக் கொடுப்பாகும் மக்களின் சம்மதத்தைப் பெறாமல் மக்களின் பெயரால் கருமங்கள் ஆற்ற முற்படும் ஒருவகை மோசடி என்றும் இதனைக்கூறலாம்.

## நிகழ்ச்சி நிரல்

### 1994-07-10 ஞாயிறு இரவு

08.01- சிறப்பு நிகழ்ச்சி ''ஜூலை பத்தில் பதிந்த வரலாறு''
08.20- தாயகப் பாடல்கள்
08.30- செய்திகள்
08.40- தொடர் நாடகம் இலங்கை மண் 31 ஆம் அங்கம்

### 1994-07-11 திங்கள் காலை

07.02- மாவீரவணக்கம்
07.15- மணியாரம்
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- தாயகப் பாடல்கள்

## கூட்டம்

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த விஞ்ஞானம், சங்கீதம், தொழில் நுட்பபாடங்களுக்குரிய முதன்மைஆசிரியர்களை தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு தொடர்பாக நாளை காலை 10.00 மணிக்கு கோட்டப் பணிமனையில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமுகந்தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## யாழ்.

வர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுமாறு பலஉறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் பலர் வேட்பாளராக போட்டியிட முன்வந்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து தான் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலை

திருகோணமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

களில் மிக வயது குறைந்த தலைவராக இருந்தார். இவர் கொரிய கிளர்ச்சியின் பின்னர் 36 வது வயதில் தலைவராக நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இறக்கும்வரை 46 ஆண்டுகள் இவர் வடகொரியாவின் தலைவராக இருந்துள்ளார்.

வடகொரிய - தென்கொரிய இணைப்பு தொடர்பாக அண்மையில் இவர் தென்கொரிய தலைவரை சந்திக்கவிருந்தார்

# இரு அரசுகளும் இணக்கம்

## முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவிப்பு

தமிழக மீனவர்கள், சர்வதேச எல்லைக் கோட்டைக் கடந்துமீன் பிடிப்பது தொடர்பாக, இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையேஓர் இணக்கம் உருவாக வழியேற்பட்டிருப்பதாக தமிழக முதலமைச்சர்ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவதை கருத்திற்கொண்டே இவ் இணக்கம்உருவாக இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

## அமரர்

க்கு அவரது மறைவுக்குப் பிந்திய விருதாக வழங்கிக் கௌரவிக்கின்றது.

தாம் சார்ந்த துறையினூடு, தியாக உணர்ச்சியோடும், இனப் பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம்மண்ணுக்குத்தொண்டாற்றி, இளையதலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கே இவ் விருதை எமது கழகம் வழங்குவது வழக்கமான போதும், விதிவிலக்காக இம்முறை இவ்விருது மறைந்த ஒருவருக்குவழங்கப்படுகிறது.

விருதிற்கான மக்களபிப்பிராயம் கோரப்பட்ட வேளையில், வாழ்ந்து கொண்டிருந்த பேராசிரியரவர்களுக்கே இவ் விருதை வழங்க வேண்டுமென பெரும்பான்மையானோர் சிபார்சு செய்தமையினால் கழக அறிஞர் குழு வழமையான நியந்தனையை மீறி, பேராசிரியர் அவர்களின் மறைவுக்குப் பிந்தியதாக இவ் விருதை அவருக்கு வழங்குவது பொருத்தமென நீண்ட நேர சர்ச்சையின் பின் முடிவு செய்தது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று 1957 இல் பொறியியல் பட்டதாரியானார். பட்ட மேற்படிப்பினை கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து 1962 இல் டாக்டர் பட்டத்தினைப் பெற்றார். 1962 முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், பீடாதிபதியாகவும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் பேராசிரியராகவும் பணியாற்றி பல சிறந்த பொறியியல் வல்லுனர்களை உருவாக்கியவராவார். கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் அதிதி நிலைப் பேராசிரியராகவும் (Visiting Professor) கடமையாற்றியுள்ளார்.

அமரர். பேராசிரியர் துரைராசா அவர்கள் தான் பெற்றிருந்த கல்வித் தகைமையினால் உலகின் எப் பகுதியிலும் பெருமையுடனும், இங்குள்ளதைவிடப் பன்மடங்கு வசதியுடனும் வாழ முடிந்திருந்தும் தன் தாய் மண்ணுக்காக அனைத்தையும் துறந்து அடிப்படை வசதிகள் கூட அருகிய இந்த மண்ணில் முழு மனத்துடன் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1988-ல் மிகச் சிக்கலான காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்று சுமார் 6 வருடங்கள் பல்கலைக்கழகத்தைச் சிறப்பாக வழிநடத்தியதுடன், பல்கலைக்கழகத்தினூடு சமூகத்திற்கும் அரும்பணியாற்றினார்.

இங்கு தான் வகித்த பதவியினூடு பெறக்கூடிய வசதிகளைக் கூட ஏற்க மறுத்து ஓர் சாமானிய மனிதன் பெறக் கூடிய வசதிகளை மாத்திரமே அனுபவித்து வாழ்ந்து காட்டியமை வருங்காலச் சந்ததியினருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து இம் மண்ணை வியக்க வைத்தது.

பேராசிரியரவர்கள் பதவி மாற்றம் பெற்றுச் சென்ற போதும். அவரது மறைவின் போது மக்கள் காட்டிய உணர்ச்சி வெளிப்பாடு, இம் மண்ணிலே அவர் எவ்வளவு தூரம் பதிந்திருந்தார் என்பதை நன்கு எடுத்துக்காட்டியது.

தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பேராசிரியர் அவர்களைக் கௌரவித்தமை அவர்தம் சேவைக்குக் கிடைத்த அதியுயர் சிறப்பாகும்.

இத்தகைய சான்றோருக்கு அவரது மறைவுக்குப் பிந்திய நிலையிலும் இவ்வாண்டுக்கான மகரயாழ் விருதை வழங்கிக் கௌரவிப்பதில் எமது கழகம் பெருமகிழ்வெய்துகிறது.

சமூகப் பொறுப்புணர்வோடு இவ் விருதுக்கான சிபார்சுகளைப் பெருமளவில் வழங்கிய அனைத்துப் பெருமக்களுக்கும், சமூக அமைப்புக்களுக்கும், செய்திகள் வெளியிட்டுதவிய தொடர்பு சாதனங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன

செங்கலடி - பதுளை வீதியில் இப்பௌசர் தடம் புரண்டதாகவும் அதன் சாரதியான பதுளையைச் சேர்ந்த சிப்பாய் ஒ. ஜ. கருணாதாச பலியாகியதாகவும் தெரியவருகிறது.

## தெற்கு

உதவியும் கோரப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா, மட்டக்களப்பு, திருமலை, பதுளை ஆகிய ரயில்களைப்பொறுத்தவரையில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பினராயிருந்த அல்ஹாஜ் புகார்தீன் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

இவர் ஐ. தே. க. சார்பில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடலாம் எனத் தெரியவருகிறது.

## அரசியலமைப்பை மாற்ற முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்றத்தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த விடாது தவிர்க்கும் நோக்குடன் பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரமும் வழங்கும் அமைப்பை உருவாக்கும் நோக்குடன் ஒருமைப்பாட்டிற்கு வர ஐ. தே. க. தற்போது திட்டமிட்டுள்ளது.

இதற்காக பொது ஜன ஐக்கிய முன்னணியை ஒப்புக் கொள்ள வைக்க தற்போது அனுரா பண்டாரநாயக்காவை பயன்படுத்தி வருவதாக ஜனாதிபதிக்கு நெருக்க வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

## புலிகளை ஆதரிப்போம்

(சென்னை)

தனி ஈழத்துக்காக போராடும் விடுதலைப் புலிகளை தொடர்ந்து ஆதரிப்போம் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இந்தக் கொள்கையில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதில் இருந்து பின் வாங்க மாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரிச்சாட்

தாகவும் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவத் தளபதியோ அன்றி செயலாளரோ எந்த முகாமில் ரிச்சாட் தடுத்து வைக்கப்பட்டதாக தன்னிடம் தெரிவிக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

## மரண அறிவித்தல்கள்



### திரு. சிங்காரவேலு பாலசுப்பிரமணியம்

நல்லூர், அரச வீதி இலக்கம் 3ஐச் சேர்ந்த திரு. சிங்காரவேலு பாலசுப்பிரமணியம் அவர்கள் 9-7-1994 சனிக்கிழமையன்று காலமானார். இவர் விஜயவனிதாவின் அன்புக் கணவரும் லதன், வினோஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு, காமாட்சியம்மாள் ஆகியோரின் மூத்த மகனும் குமாரசாமி கமலாவதி ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீகரத்தினம் (ஜேர்மனி). யோகநாதன், ஆனந்தராசா (கனடா) கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கவேல், பாலகிருஷ்ணன், பரமசிவம் (கனடா), இராசராசேஸ்வரி, ஜெயந்தி (கனடா) காளிதாஸ், உதயணன் (லண்டன்), சிவனேஸ்வரநாதன் (சவூதிஅரேபியா), மதுரகுமார், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேஸ்வரி, வசந்தா ஆகியோரின் மனைவி வழியான சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-07-1994 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார். உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அரசவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (8765)

தகவல்;
சி. யோகநாதன்
(சகோதரன்)

### திருமதி மனோன்மணி நடராசா

ஆனைக்கோட்டையைச்சேர்ந்த திருமதி மனோன்மணி நடராசா 09-7-94 அன்று காலமாகிவிட்டார். இவர் விஜயேஸ்வரி, கருணேஸ்வரி, விமலேஸ்வரி, சிறீகணேச இளங்கோவன், மங்களேஸ்வரி, லிங்கேஸ்வரி, சிறிபால இளங்கோவன் ஆகியோரின் அன்புத்தாயாரும் நவரட்ணம், சிறீதரன், குகானந்தன், சத்தியபாலன், ஜெகதாஸ், இந்திராதேவி ஆகியோரின் மாமியாரும்ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 11 00மணிஅளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சி. நவரட்ணம்

ஆலடி ஞானவைரவர்
கோவிலடி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (8768)

## அறிவித்தல்

### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வரையுள்ளது)

பதிவு இல | 8304-04-1936

காரைநகர், பண்டத்தரிப்பு, மாதகல் உட்பட மற்றும் இடங்களிலிருந்து தற்பொழுது இடம் பெயர்ந்து வசிக்கும் இவ்வைத்தியசாலைச்சங்கத்தின் அங்கத்தவர்கள் தங்கள் தற்போதைய முகவரியுடன் பின்வரும் விபரங்களையும் இச் சங்கத்திற்கு 1994-07-24-ம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

1. முழுப்பெயர்:-
2. அங்கத்தவர் இலக்கம்:-
3. முன்னைய முகவரி:-
4. தற்போதைய முகவரி:-

மூளாய்,
சுழிபுரம்.
10-07-1994 (சி-9781)

வ. அ. வரதராசா
தலைவர்

## முக்கிய அறிவித்தல்

### வலி- கிழக்கு வர்த்தகர் சங்கம் (கோப்பாய் வட்ட பிரிவு)

### வருடாந்த பொதுக் கூட்டம் பிற்போடல்

10-07-1994-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை (இன்று) பி ப. 3.00 மணிக்கு நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 30-07-1994-ம் திகதி சனிக்கிழமை, பி. ப 3.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதென்பதனை அனைத்து வர்த்தகர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

த. பராசசிங்கம்
தலைவர்

[8768]

அ. நாகேஸ்வரன்
செயலாளர்

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
3-9-1972

வீரச்சாவு
10-7-1990



### வீரவேங்கை சீனிவாசன்

(செல்வராசா உமையாளன்) ஈசன்

தமிழினம் வாழ்வதற்காய் நீ இறந்தாய்
தமிழீழ சரித்திரத்தில் தங்கமென மிளிர்கின்றாய்
உனை இழந்து நாலாண்டு காலம் கண்ணீரில்

## விஞ்ஞான செயன் முறைத் தேர்வு

விஞ்ஞான செயல்முறை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஆறில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விஞ்ஞான செயன் முறைத் தேர்வு நாளை காலை 9 00 மணி முதல் நடைபெறும் எனக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## அதிபர்கள் கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## "சத்தியவான் சாவித்திரி"

பிரபல நடிகர் தைரியநாதன் குழுவினரின் "சத்தியவான் சாவித்திரி" நாடகம் இன்று இரவு வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வீதியில் மேடையேற்றப்படவுள்ளது.

நாடக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க "அரிச்சந்திர மயான காண்டம்" நாடகத்தில் முக்கிய பகுதிகள் தைரியநாதனால் நடித்துக் காண்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஸ்ரீதரில்
தினசரி 4.00
மணிக் காட்சியாக
உயிராயுதம்
தினசரி 6.00 சனி,
ஞாயிறு 10.30, 6.00
மணி காட்சியாக
JURASSIC
PARK
இன்று மட்டும்
2.30 மணி

## 1ஆவது பிறந்ததின வாழ்த்து

(10-7-94)



### சந்திரன் - சாருஷா

வட அல்வை சந்திரவேல் - தங்கநிலா தம்பதிகளின் அருந்தவப்புதல்வி சாருஷா தனது முதலாவது பிறந்த தினத்தை 10-7-94-ல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

சாருஷாவை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியமாமா (உதவிபதிவாளர் யாழ் பல்கலைக்கழகம்) பெரியத்தை (மட்டக்களப்பு), சின்னமாமா, சின்னத்தை, ஆசைமாமா, ஆசையத்தை (மட்டக்களப்பு), நல்லமாமா (சவுதி), இளையமாமா, குட்டிமாமா, (டோகா) அன்ரா சித்தி. சித்தப்பா (லண்டன்), அப்பம்மா பெரியப்பா, பெரியத்தை, சின்னத்தை குடும்பத்தினர் (சுணாகம்), ரமேஸ் அத்தான் (டோகா) மற்றும் மச்சான்மார். மச்சாள்மார் உற்றார், உறவினர்கள் யாவரும் சாருஷவை முருகன் அருளால் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்,

அல்வாய் வடக்கு,
அல்வாய். (8764)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



கோவிலடி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (8768)

---

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:
24 .4. 1943

உதிர்வு:
2 .7. 1992

திதி: 10. 7. 1994

**அமரர் பொன்னம்பலம்**
**சுந்தரேஸ்வரன்**
**(பிரதம புகையிரத பாதுகாவலர், மருதானை)**
ஊரதீவு, புங்குடுதீவு

காலமகள் நீரோட்டம் கடுகதியாக விரைந்தாலும்
ஓடி மறையுமோ உங்கள் நினைவுகள்
கொலுவிருத்தி மலர்தூவி விளக்கேற்றி
மாலையிட்டுக் கொள்கின்றோம் அஞ்சலிகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

90, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

மனைவி, மகள்

(8761)

---

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் திரு. இ. இரத்தினவிநாயகர்**
(மணடைதீவு)

எமது சங்கத்தில் பலவருட காலமாக கிளை முகாமையாளராகவும், பிரதம இலிகிதராகவும், செயலாளராகவும் கடமையாற்றி 02-07-94-ல் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினருடனும், உறவினர்களுடனும் எமது ஆழ்ந்த துக்கத்தை பகிர்ந்து கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகின்றோம்.

**கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்**
**பணிப்பாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.**
**பரந்தன்.**

(8755)

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

**வீரவேங்கை சனிவாசன்**
**(செல்வராசா உமையாளன்) ஈசன்**

தமிழினம் வாழ்வதற்காய் நீ இறந்தாய்
தமிழீழ சரித்திரத்தில் தங்கமென மிளிர்கின்றாய்
உனை இழந்து நாலாண்டு காலம் கண்ணீரில்
வாடுகிறோம்

புன்னகையில் பூத்தமுகம் இனி எங்கே
காண்பது என்று ஏங்குகிறோம்.

எல்லாம் வல்ல ஐயப்பன் பாதாரவிந்தத்தில்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

ஐயனார்கோவிலடி,
மல்லாகம். (8749)

உன் நினைவோடு வாழும்
குடும்பத்தினர்

---

JURASSIC
PARK

இன்று மட்டும்
2.30 மணி
காட்சியாக

மே, 94 ஒளிவீச்சு
(சி-9786)

---

## நினைவலைகள்

**2-ம் ஆண்டு**



**மேஜர் கிண்ணி**
**(கந்தசாமித்துரை ரவீந்திரன்)**
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் முன்னால் விசேட தளபதி)

மண்ணில் மலர்வு:
25 - 07 - 1966

வீரச்சாவு:
10 - 07 - 1992

**7-ம் ஆண்டு**



**கப்டன் முரளி**
**(கந்தசாமித்துரை சிறிதரன்)**

மண்ணில் மலர்வு:
10 - 05 - 1961

வீரச்சாவு;
02 - 04 - 1987

சண்டைக் களத்தில் சாதனை குவியும்
புலிகளின் தற்கொடை புவியினை உசுப்பும்
போர்த்திறன், வீரம் வியப்பினைக் கொடுக்கும்
மரணம் தோற்றுப் போகும விதமாய்
மலித காவியப் பிறப்புக்கள் பெருகும்.

அம்மா, தங்கை, நண்பர்கள்.

(8766)

---



**கப்டன் உஷா**
**(வனிதாம்பிகை இராசையா)**
முள்ளியவளை

பிறப்பு
1967-10 20

வீரச்சாவு
1990 07-10

தமிழ் மண்ணின் விடிவிற்காய் தரணியில் வந்துதித்த சகோதரியே சின்னஞ்சிறு வயதினிலே தந்தையையிழந்தும் தாயையிழந்தும உயிருக்குயிராய் இருந்த அருமை அண்ணாவையுமிழந்தும் நாங்கள் ஆறாத் துயரில் மூழ்கியபோது அன்னைபோல் ஆறுதல் தந்தாய் கொக்காவில் இராணுவமுகாம் தகர்ப்பின் போது-எதிரியின் குண்டு உன்னுடம்பில் பாய்ந்ததுவோ எம்மினிய சகோதரியே ஆண்டுகள் நான்கு ஆனபோதிலும் ஆறுமோ எங்கள் அழுகின்ற நெஞ்சு எமக்கு ஆறுதல் சொல்லி அரவணைத்த உன் அன்பு முகமினி காண்பது எப்போ ஆறாத்துயரில் ழுகின்ற எமக்கு ஆறுதல் சொல்வதற்கு எப்போ அவனியில் வருவீர் எமதன்புச் சகோதரியே! சகோதரியுடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

இல, 16 விதானையார் வீதி
சுண்டிக்குழி

தங்கமார், அக்காமார்
மைத்துனர்மார், பிள்ளைகள்
போராளி லக்ஷமணா

(8759)